மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# சிற்றிலக்கியங்களில் வாழ்வியல் கூறுகள் - பள்ளு இலக்கியம்
# Life Aspects in Sitrilakkiyam - Pallu Literature

K. Durga Devi / கி. துர்காதேவி[1]
Manonmani Devi M.A.R Annamalai / மனோன்மணி தேவி அண்ணாமலை[2]

[1]உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, வேல்ஸ் பல்கலைக்கழகம்
[2]இணைப்பேராசிரியர், சுலுத்தான் இதுரீசு கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா.

Date of Submission: 14-09-2025
Date of Acceptance: 23-10-2025
Date of Publication: 25-12-2025
Corresponding Author's Email:
manonmanidevi@fbk.upsi.edu.my

**ஆய்வுச் சுருக்கம்**

இக்கட்டுரை தமிழ் சிற்றிலக்கிய வகைமைகளுள் ஒன்றான பள்ளு இலக்கியம் வெளிப்படுத்தும் உழவர் சமூகத்தின் வாழ்வியல் கூறுகளை விரிவாக ஆராய்கிறது. உழவுத் தொழிலைப் போற்றும் மள்ளர் அல்லது உழவர் பெருமக்களின் பண்பாடு, சடங்குகள் மற்றும் அவர்களின் அன்றாட வாழ்க்கை முறைகளைப் பதிவு செய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். சங்க கால உழத்திப்பாட்டு முதல் பிற்கால பள்ளு நூல்கள் வரை நிலவும் இலக்கியத் தொடர்புகளைக் குறிப்பிடும் இக்கட்டுரை, முக்கூடற்பள்ளு, திருமலை முருகன் பள்ளு போன்ற நூல்களில் இடம்பெற்றுள்ள மழைக்குறிகள், சகுனங்கள், மற்றும் திருமணச் சடங்குகள் குறித்து விளக்குகிறது. மேலும், உழவுத் தொழில் சார்ந்த கலைச்சொற்கள் மற்றும் வட்டாரப் பழமொழிகள் எவ்வாறு பள்ளு இலக்கியங்களில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன என்பதையும் இவ்வாய்வு சுட்டிக்காட்டுகிறது. ஒட்டுமொத்தமாக, பள்ளு இலக்கியங்கள் வெறும் கற்பனைப் படைப்புகளாக இன்றி, தமிழகத்தின் வேளாண் மரபையும் சமூகக் கூறுகளையும் பாதுகாக்கும் காலப்பெட்டகங்களாகத் திகழ்வதை இக்கட்டுரை உறுதி செய்கிறது.

**Abstract**

This research paper provides a comprehensive analysis of the lifestyle and cultural aspects of the farming community as portrayed in Pallu literature, a significant genre of Tamil Minor Literature (Sittrilakkiyam). The primary objective of this study is to highlight the cultural traditions, rituals, and daily routines of the Mallars (farmers) who dedicated their lives to agriculture. Tracing the literary evolution from ancient labor songs (Uzhatthippattu) to later Pallu texts, the paper examines specific elements such as rain omens, omens of fortune, and marriage customs found in works like Mukkudar Pallu and Thirumalai Murugan Pallu. Furthermore, the study explores how agricultural terminology and regional proverbs are meticulously documented within these texts. Ultimately, the research affirms that Pallu literature serves not merely as creative fiction but as a vital historical archive, preserving the agrarian heritage and social fabric of ancient Tamil Nadu.

## முன்னுரை

சிற்றிலக்கியங்கள் அறம், பொருள், இன்பம் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றை எடுத்துரைக்கும் வகையில் அமைந்துள்ளன. இவ்வகையில் தூது, உலா, பிள்ளைத்தமிழ், கலம்பகம், கோவை, குறவஞ்சி, பள்ளு போன்ற பல்வகை இலக்கியங்கள் சிற்றிலக்கியம் வகைமையைச் சார்ந்தவை. சிற்றிலக்கிய வகைகள் தொண்ணூற்றாறு என்று கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் தோன்றிய பிரபந்த மரபியல் என்ற பாட்டியல் நூல் கூறுகின்றது. இந்நூல்,

**"பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறாகத்**

**தொண்ணூற்றாறு என்னும் தொகையது ஆம்"**

என்கிறது.

பல்வேறு காலக் கட்டங்களில் பல்வேறு சிற்றிலக்கிய நூல்கள் இன்று வரையிலும் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. எனினும் கி.பி. 15ஆம் நூற்றாண்டு முதல் 19ஆம் நூற்றாண்டு வரை பல சிற்றிலக்கியங்கள் தோன்றின. இக்காலகட்டமே சிற்றிலக்கியக் காலம் எனப்படுகிறது. சிற்றிலக்கியம் என்ற இலக்கிய வகையானது பெயரளவில் சிறு இலக்கியம் என்ற பொருளைத் தந்தாலும் பேரிலக்கியத்திற்கு இணையாகப் பல சிறப்புகளைக் கொண்டுள்ளது. பல்வேறு சமயத்தவர்களும் சிற்றிலக்கிய வகைகள் பலவற்றைப் படைத்துள்ளனர். நாட்டுப்புற இலக்கிய வகைக் கூறுகள் பலவற்றைக் கொண்டு நாட்டின் சமுதாய, அரசியல், பண்பாட்டினை வெளிப்படுத்தும் வகையில் உள்ளது. சிற்றிலக்கியங்களை 'விருந்து' எனக் குறிக்கின்றது தொல்காப்பியம்.

**"விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" (பொருளதிகாரம், 201)**

சிற்றிலக்கிய வகைகளில் எளிமையும் இனிமையும் வாய்ந்த ஓர் இலக்கியம் பள்ளு இலக்கியம் ஆகும். பள்ளு இலக்கியங்களின் வழி அக்கால மக்களின் வாழ்வியல் கூறுகளை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்ற குறிக்கோள் கொண்டது பண்டைச் சமுதாயம். உழவுத்தொழிலில் ஈடுபட்ட வீரர்களை மள்ளர்கள், உழவர்கள் என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

பண்டைக்காலத்தில் மக்கள் விளைநிலங்களில் பணிசெய்யும் நேரங்களில் களைப்பு தோன்றாதிருக்க பாடல்கள் பாடுவர். ஏற்றம் இறைத்தல், வண்டியோட்டுதல், படகில் துடுப்பு வலித்தல், உரலில் நெல் குற்றுதல், புனத்தில் கிளி ஓட்டுதல் என்ற பல்வேறு பணிகளைச் செய்யும்பொழுது தனித்தோ, குழுவாக சேர்ந்தோ பாடல் பாடுவர். இதனை ஏற்றப்பாட்டு, வண்டிக்காரன் பாட்டு, ஏலேலோ பாட்டு, வள்ளைப்பாட்டு, கிளிப்பாட்டு என்பர். இத்தகைய பாடல்கள் பிற்காலப் பள்ளு இலக்கியம் தோன்றுவதற்குரிய வித்துக்களாய் அமைந்தது எனலாம்.

உழவர் உழத்தியர் பணிசெய்யுங்கால், வேலைச்சுமை தெரியாவண்ணம் களைப்படையாமல் இருக்கப் பாடி மகிழ்வர். மேலும் தமிழ் நாடு உஷ்ணப் பிரதேசத்தைச் சார்ந்தது. பெரும்பாலும் வெயிற்காலத்திலே வெம்மை மிகுந்த பகலிலே, ஒதுங்க நிழலில்லாத வயற்காட்டிலே, காலை முதல் மாலைவரை ஒரே கவலையாய் உழைத்து வருபவர்கள் பயிரிடுவோர்கள். அவர்களுக்குச் சிரமம் தோன்றாதிருக்கவும், நேரம் எளிதில் கழிந்து போவதற்காகவும், அவர்கள் வாழ்க்கையோடொத்த எளிய இனிய பாட்டுக்களைப் பாடுவது வழக்கமாயிருந்தது' என்று திரு. வையாபுரிப் பிள்ளை அவர்களின் கூற்று அறியத்தக்கது.

சிலப்பதிகாரம், பணி செய்யும் உழவர் பெருமக்கள் பாடி மகிழ்ந்த சிலவகைக் குழுப்பாடல்களைப் பற்றிய குறிப்புகளை நமக்கு தந்துள்ளது.

## விருந்திற்பாணி

உழத்தியர் கழனிகளில் இறங்கி நாற்று நடுதலில் ஈடுபடும்பொழுது பாடல்களைப் பாடி மகிழ்வர். இதனை விருந்திற்பாணி என்பர்.

**கடிமலர் களைந்து முடிநா றழுத்தித்**

**தொடிவளைத் தோளும் ஆகமும் தோய்ந்து**

**சேறாடு கோலமொடு வீறுபெறத் தோன்றிச்**

**செங்கய னெடுங்கட் சின்மொழிக் கடைசியர்**

**வெங்கட் டொலைச்சிய விருந்திற் பாணியும்**

**- சிலம்பு, நாடு காண். 127-131**

எனவரும் வரிகளில் அறியலாம். உழத்தியர் பாடும் இப்பாடல் 'விருந்திற் பாணி' எனும் பெயர் பெறும். 'விருத்திற்பாணி என்பதற்குப் பண் நிறத்திற் சேர்ந்து பழகிப் போகாத பாட்டு' என்று அடியார்க்கு நல்லார் உரை வரைவர். மேலும் 'தம் இசையில் புதுமை யுண்டாகப் பாடும் பாட்டெனினும் அமையும்' என்று கூறி 'இதனைப் பெருமுளை என்பாரும் உளர்' என்றும் விளக்குவர்.

### ஏர்மங்கலம்

வயலில் முதன்முதலாக ஏர்பூட்டுவதைப் 'பொன்னேர் பூட்டுதல்' அல்லது 'நாளேரிடல்' என்பர். செந்நெல் கதிரும், அறுகம்புல்லும் குவளைமலரும் கலந்து தொடுக்கப்பட்ட மாலையை உழவர் தங்கள் ஏர்கலப்பையில் சூட்டி மகிழ்வர். ஏரைப் போற்றித் துதிக்கும் பாடலைப் பாடுவர். இங்ஙனம் பொன்னேர் பூட்டும் உழவர்கள் தம் உழவுக் கருவியாகிய ஏரை வாழ்த்தி, நன்கு விளையுமாறு வேண்டிப் பாடும் பாட்டு ஏர்மங்கலம் எனப்படும்.

இதனை,

**கொழுங்கொடி அறுகையும் குவளையும் கலந்து**

**விளங்குகதிர்த் தொடுத்த விரியல் சூட்டிப்**

**பாருடைப் பனர்போல் பழிச்சினர் கைதொழ**

**ஏரொடு நின்றோர் ஏர்மங் கலமும்**

**எனவரும் பகுதியால் அறியலாம்.**

**- சிலம்பு. நாடு காண். 132-135**

### முகவைப் பாட்டு

முகவைப் பாட்டு என்பது பற்றிப் பார்ப்போம். வயல்களில் நெற் பயிர்கள் நன்றாக விளைந்த பின்பு அவற்றை உழவர்கள் அறுப்பர். அவற்றை வீட்டிற்குச் சுமந்து வந்து பரப்பி, மாடுகளால் மிதிக்கச் செய்து நெல்லையும் வைக்கோலையும் பிரிப்பர். அப்போது பாடும் பாட்டு முகவைப் பாட்டு எனப்படும். உழவர்கள் பாடும் இம்முகவைப் பாட்டைப் பற்றி,

**அரிந்துகால் குவித்தோர் அரிகடா வுறுத்த**

**பெருஞ்செய்ந் நெல்லின் முகவைப் பாட்டும்'**

**- சிலம்பு. நாடு காண். 136-137**

என சிலம்பு விளக்கும். இம்முகவைப் பாட்டைப் 'பொலிபாட்டு' என்றும் அழைப்பர்.

### பள்ளு இலக்கியம்

பள்ளு இலக்கியம் என்பது தாழ்ந்த, பள்ளமான நன்செய் நிலங்களையும் அங்குச் செய்யப்படும் உழவுத் தொழிலையும் குறிக்கும் பாட்டாகும். ஆகவே, பள்ளு என்பது உழவரின் பாட்டுக்குப் பெயராக அமைந்தது.

விவசாயத் தொழில் செய்யும் உழவர்கள், உழத்தியர்கள் ஆகியோரின் வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளை எளிமையாக, இனிமையாக, சுவையாகக் கூறுவதே பள்ளு இலக்கியத்தின் நோக்கம் ஆகும்.

பள்ளு இலக்கியங்கள் அந்தந்த ஊர்களைப் புகழ்வதற்காகவும் அங்கே வாழ்ந்த செல்வர்களைப் புகழ்வதற்காகவும் பின்னர் இயற்றப்பட்டன. மொத்தம் 40 பள்ளு நூல்கள் இருப்பதாக மு.வ., கூறுகிறார். என்னயினாப் புலவர் என்பவர் மேடையில் நடிக்க ஏற்ற வகையில் முக்கூடற் பள்ளுவை முக்கூடற் பள்ளு நாடகமாகப் பாடினார். பல இடங்களில் நடிக்கப்பட்டும் வந்தது.

பள்ளு இலக்கியங்கள் பொதுவான கதை ஒன்றை அடிப்படையாகக் கொண்டவை. பண்ணை ஒன்றில் வேலை செய்யும் இரு மனைவியரைக் கொண்ட பள்ளனின் வாழ்க்கையைச் சித்தரிப்பதாக அவை அமைந்துள்ளன. பண்ணையில் நிகழும் உழவுத்தொழில், பள்ளன் விவசாயத்தையும் மாடுகளையும் கவனிக்கும் முறை, மாட்டு வகைகள், விதை வகைகள், மூத்த பள்ளிக்கும், இளைய பள்ளிக்கும் இடையே நிகழும் சண்டைகள், இந்தச் சண்டையில் பண்ணையார் தலையீடு செய்தல், இறுதியில் மூத்த பள்ளியும் இளைய பள்ளியும் சமரசமாகி பள்ளனோடு சேர்ந்து வாழ்தல் ஆகியன கதைக்கூறுகளாக பொதுவாகப் பள்ளு இலக்கியங்களில் காணப்படுகின்றன.

பள்ளு இலக்கியம் இசைப்பாடல் தன்மை உடையது. பந்துவராளி, பைரவி, காம்போதி, சங்கராபரணம், ஆனந்த பைரவி, புன்னாகவராளி, கேதார கௌளம், காம்போதி, மத்யமாவதி, மோகனம், நாட்டை, சுருட்டி போன்ற ராகங்களில் பாடல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நீர்வளம், நிலவளம் பேசும் இலக்கியம் பள்ளு இலக்கியம். வளை மேழி, நோக்கால், பரம்பு, மேழி, வடம், வள்ளக்கை, குத்தி, கொழு, கலப்பை, நுகம், கயமரம், கழுந்தேர்க்கால், கைக்கோல், கொட்டு, உழவுகோல், ஏர்க்கால் எனும் உழவு கருவிகள் பலவும் இவ்விலக்கியத்தில் பேசப்படுகின்றன.

**பிற இலக்கியங்களில் பள்ளுக்கூறுகள்**

சிற்றிலக்கியங்களில் பெரும்பாலானவை ஏறத்தாழ ஒரே வகையான பாடுபொருளைக் கொண்டு வளர்ந்தவை. பாட்டுடைத் தலைவன் புகழைப்பாடி மகளிர் ஊசலாடுவதைக் கூறும் இலக்கிய வகை ஊசல் இலக்கியம். பாட்டுடைத் தலைவன் வீதியில் வருங்கால், அவனைக் கண்ட ஏழுபருவ மகளிர் மையலுற்று வாடுவதைக் கூறுவது உலா இலக்கியம். தலைவனின் உலாக்காட்சியால் தனக்கு ஏற்பட்ட காம மிகுதியைத் தோழியரிடம் கூறி வருந்தும் தலைவியின் நிலையைக் காட்டுவது பவனிக்காதல் இலக்கியம். உலாவில் கண்ட தலைமகனின் மாலையை வாங்கி வருமாறு தலைவி உயர்திணைப் பொருளையோ, அஃறிணைப் பொருளையோ தூது விடுவது தூது இலக்கியம். உலாவில் கண்ட தலைமகனை விரைந்து கூடுவாய் எனத் தலைவிக்குக் குறத்தி குறிகூறுவது குறவஞ்சி இலக்கியம். இங்ஙனம் ஊசல், உலா, பவனிக்காதல், தூது, குறவஞ்சி முதலிய சிற்றிலக்கியங்களின் பாடுபொருள் ஒன்றிலிருந்து ஒன்று வளர்ச்சி பெற்று விளங்கும் பான்மையை அறியலாம்.

பள்ளு என்னும் பெயரும்கூட பொதுமக்களைக் கவரும் வகையில் அமைந்து விளங்கியது. எனவேதான், தேசியக் கவிஞர் பாரதியார், பள்ளு என்னும் பெயரைப் பயன்படுத்திச் சுதந்திரப்பள்ளு பாடுகின்றார்.

**ஆடுவோமே பள்ளு பாடுவோமே**

**ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று**

**(தேசியகீதங்கள், 31)**

இராகம், தாளம் வகுக்கப்பட்ட இசைப்பாடலாக இது மிளிர்கின்றது. பொது மக்களுக்குச் சுதந்திரத் தாகத்தை வழங்குவதற்கு உரிய இசைப்பாடலாக தேசியக்கவிஞர் இச்சுதந்திரப்பள்ளுவைத் தந்துள்ளார். ஆட்டமும் பாட்டுமாகத் திகழ்வதே பள்ளு என்பதையும் விளக்கும் வகையில் இப்பாடல் அமைந்துள்ளதைக் காணலாம்.

**இலக்கணம்**

பல்வேறு சிற்றிலக்கிய வகைகளுக்கு உரிய இலக்கணத்தைப் பாட்டியல் நூல்கள் கூறுகின்றன. ஆனால், இப்பாட்டியல் நூல்களில் பள்ளு என்ற சிற்றிலக்கிய வகையின் இலக்கணம் காணப்படவில்லை. ஆனால், நவநீதப் பாட்டியலில் பிற்காலத்தில் சேர்க்கப் பெற்றுள்ள பல பாடல்கள் காணப்படுகின்றன. உழத்திப் பாட்டைக் குறிப்பிட்டுவிட்டு இதைப் பள்ளும் என்பர் எனக் கூறுகின்றது.

வீரமாமுனிவர் இயற்றிய சதுரகராதியில் தொகை அகராதி என்ற பிரிவில் சிற்றிலக்கிய வகைகள் பலவற்றின் விளக்கங்கள் கூறப்படுகின்றன. அவற்றுள் உழத்திப் பாட்டு என்பதன் விளக்கமும் உள்ளது.

பிரபந்த மரபியல், பிரபந்தத் தீபிகை, வச்சணந்தி மாலை, பன்னிருபாட்டியல், சிதம்பரப்பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல் போன்ற இலக்கண நூல்களில் பள்ளு பற்றியக் குறிப்புகள் ஏதும் இடம் பெறவில்லை. தொல்காப்பியத்தில் பொருளதிகாரம், செய்யுளியல் இடம் பெற்றிருக்கும் 'சேரிமொழியாற் செவ்விதிற் கிளந்து' என்ற நூற்பாவில் 'சேரிமொழி' என்பது பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளது. பன்னிரு பாட்டியலில் உழத்திப்பாட்டு என்ற வகைமைக்குரிய இலக்கணமாக

**புரவலற் கூறி யவன்வா ழியவென்று**
**அகல்வயவ் தொழிலை யொருமை யுணர்ந்தனள்**
**எனவரும் ஈரைந்து உழத்திப் பாட்டே." (பாட்டியல் நூற்பா)**

என்ற குறிப்பு காணப்படுகிறது.

அரசனை வாழ்த்தி உழவுத் தொழிலைக் கூறும் பத்துப் பாட்டுக்களைக் கொண்ட இலக்கியவகை உழத்திப்பாட்டு எனப்பெயர் பெறும் என்பதை இதனால் அறியலாம். ஆனால் 'உழத்திப் பாட்டு' பள்ளு இலக்கியமாகாது என்பது மு. அருணாசலத்தின் கருத்து. ஆனால் 'நவநீதப்பாட்டியல்' உழத்திப் பாட்டே பள்ளு என்கிறது.

**செவ்விதிற் பாடு மதுஉழத்திப் பாட்டு பள்ளுமென்பர்**
**நவ்வி எனக்கண் மடவீர் பிறவிதம் நாட்டுவரே. (நவநீதப்பாட்டியல்)**

என்ற பாட்டியல் இதனை உறுதி செய்கிறது. இருப்பினும் உழத்திப் பாட்டே பள்ளு என்றும், பள்ளு வேறு உழத்திப் பாட்டு வேறு என்றும் இரு வேறு கருத்துகள் ஆய்வாளர்களிடையே உள்ளன.

**பள்ளு நூல்களின் பாவினம்**

பள்ளு நூல்கள் வெண்பா, அகவல், விருத்தம், கலிப்பா, கலித்துறை, சிந்து போன்ற பாவினங்களில் இயற்றப்பட்டுள்ளன.

**பள்ளு வகைகள்**

நெல்லு வகையை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ண முடியாது என்ற சொல்மொழிக்கேற்ப நூற்றிற்கும் மேற்பட்ட பள்ளு வகை நூல்கள் உள்ளன. நெல் வயல்களில் வேலை செய்வோர், ஏர் பூட்டுதல் முதல் அறுவடை வரை பல்வேறு வகையான பாடல்களைப் பாடினர்.

பள்ளு இலக்கியத்தின் முதல் நூலாக முக்கூடற்பள்ளு என்ற நூல் அமைகின்றது. இந்நூல் 17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றியது என்பர். அதன் பின்னர் ஞானப்பள்ளு, திருவாரூர்ப் பள்ளு, குருகூர்ப் பள்ளு, சிவசயிலப் பள்ளு, வைசியப்பள்ளு, வடகரைப் பள்ளு, திருமலை முருகன் பள்ளு, சீகாழிப் பள்ளு, செண்பகராமன் பள்ளு, தில்லைப் பள்ளு, வையாபுரிப் பள்ளு, கண்ணுடை அம்மை பள்ளு, திருப்புன வாயிற் பள்ளு, கதிரை மலைப் பள்ளு, பறாளை விநாயகர் பள்ளு, தண்டிகைக் கனகராயன் பள்ளு, குற்றாலப் பள்ளு, திருமலைமுருகன் பள்ளு, போரூர்ப் பள்ளு, இருப்புலிப் பள்ளு, திருவிடை மருதூர்ப் பள்ளு, புதுவைப் பள்ளு போன்ற பல நூல்கள் தோன்றின

**பண்புகள்**

பள்ளு நூல்களில் பாட்டுடைத் தலைவனின் பெயர் மட்டும் கூறப்படும். மற்றவர்களின் பெயர்கள் கூறப்படுவது இல்லை. பள்ளனின் பெயர் பாட்டுடைத் தலைவனின் பெயருடன் சேர்த்துக் கூறப்படும். மூத்த பள்ளியின் பெயர் பாட்டுடைத் தலைவனின் ஊர் அல்லது நாட்டின் பெயருடன் சேர்த்துக் கூறப்படும். இளைய பள்ளியின் பெயர் பாட்டுடைத் தலைவனின் ஊரின் பக்கத்து ஊர் அல்லது பக்கத்து நாட்டின் பெயருடன் சேர்த்துக் கூறப்படும். இரண்டு பள்ளியர்களில் ஒருத்தி சிவன் அடியாராகவும் மற்றொருத்தி திருமால் அடியாராகவும் காணப்படுவர்.

**முதல் பள்ளு நூல்**

கமலை ஞானப்பிரகாசர் இயற்றிய 'திருவாரூர்ப் பள்ளு' காலத்தால் முற்பட்ட பள்ளு நூலாகக் கருதப்படுகிறது. இது 'தியாகேசர் பள்ளு' என்றும் அழைக்கப்படுகிறது. இதற்கு 'ஆதிப் பள்ளு', 'ஞானப் பள்ளு' என்ற பெயர்களும் உண்டு. தமிழில் தோன்றிய முதல் பள்ளு நூலாகச் சிலரால் 'முக்கூடற் பள்ளு' முன்வைக்கப்படுகிறது. 'மன்னார் மோகனப் பள்ளு' தான் தமிழில் தோன்றிய முதல் பள்ளு நூல் என்ற கருத்தும் உள்ளது.

**முக்கூடற் பள்ளு**

இது ஒரு வைணவ சமய நூல். பாட்டுடைத் தலைவன் அழகர். திருமாலின் மற்றொரு பெயர் இது. பள்ளனின் பெயர் அழகக் குடும்பன். மூத்த பள்ளியின் பெயர் முக்கூடற் பள்ளி, இளைய பள்ளியின் பெயர் மருதூர்ப் பள்ளி.

பண்ணையார் என்பவர் நிலமுதலாளி. பள்ளன் என்பவன் உழுது பயிரிடும் தொழிலாளி. அவனுக்கு இரண்டு மனைவிகள் (பள்ளிகள்). இருவரும் வேறுவேறு சமயத்தினர். இவர்தம் வாழ்க்கையைச்சுற்றிப் பள்ளு நூல் அமைகிறது. ஆற்றில் வெள்ளம் வருதல், மாடுகளின் இயல்பு, விதை வகைகள், உழவு, நடவு, அறுவடை முதலிய தொழில் வகைகள், கிராமத்து மக்களின் பேச்சு, பழக்க வழக்கம் என்பன முக்கூடற்பள்ளுவில் கூறப்படுகின்றன.

தமிழகக்கத்தில் புழக்கத்தில் இருந்து வந்த நெல்வகைகளின் பெயர்களை அறியத் துணைபுரியும் கையேடுகளாக இப்பள்ளு இலக்கியங்கள் விளங்குகின்றன. பண்டைத் தமிழர் நெல்வகைகளுக்கு அவற்றின் வடிவம், சுவை, பயன் ஆகியவற்றுக்கு ஏற்றவகையில் பெயர்களைச் சூட்டியுள்ளனர்.

பள்ளு இலக்கியங்கள் மூலமாகப் பண்டைத் தமிழகத்தில் வழங்கிய சுமார் 150 நெல் வகைகளின் பெயர்களை அறியலாம். நெடுமூக்கன், மூக்கன் சம்பா, மூக்கன்நெல் என்பவை மூக்கு நீண்டிருக்கும் நெல் வகைகளைக் குறிக்கவும், வாலான் நெல், சுட்டை வாலான், குதிரை வாலி என்பவை வால் நீண்டிருக்கும் நெல் வகைகளைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டன. யானையின் கொம்பைப் போலவும் காடைப் பறவையின் கழுத்தைப் போலவும் வடிவும் வண் ணமும் பெற்ற நெல் வகைகள் முறையே ஆனைக்கொம்புச் சம்பா, காடைக் கழுத்தன்சம்பா எனப்பெயர் பெற்றன. இது போன்று 150 க்கும் மேம்பட்ட நெல் வகைகளை அவற்றின் அமைப்பைக் கொண்டு பெயரிட்டு பயன்படுத்தியுள்ளனர்.

மீன்கள் பற்றிய பட்டியலும் பள்ளுவில் உண்டு. அயிந்தி, அயிரை, ஆரால், உய்யம், உழுவை, எண்ணெய்மீன், ஓராமீன், கசலி, கடந்தாய், கருங்கண்ணி, கெண்டை, கெளிறு, கெளுத்தி, குறவை, கூனி, கோளை, சாம்பன், மணலி, மத்தி, மயிந்தி, மலங்கு, வரால், வாளை, சள்ளை, சாளை, திருக்கை, துதிக்கைமூக்கன், தேளி, நொறுக்கி, பசலி, பஞ்சலை, பண்ணாக்கு, பறவை, பாசிமீன், பொத்தி, மகரம், மடந்தை என மீன்களின் வகைகள் இருந்துள்ளமை பள்ளுநூல்களின் வழி அறியலாகிறது.

**பண்பாடு சடங்கு முறைகள்**

ஒவ்வொரு நிலத்திற்கேற்ப மக்களின் பழக்கவழக்கங்கள் மாறுபடுவது இயல்பு. அவ்வகையில் மருதநிலத்து மக்கள் பேசுகின்ற மொழி, நாகரிகம், இறைவன் மீதுள்ள நம்பிக்கை, இறைவழிபாடு,

பிறப்பிலிருந்து இறப்பு வரை அவர்கள் செய்கின்ற சடங்குமுறைகளை வைத்து அவர்களின் பண்பாட்டு முறையினை அறியலாம். பள்ளு இலக்கியம் வழியாக வெளிப்படும் சடங்கு முறைகள் குறித்து காண்போம்.

வேளாண்மையின் உயிர் மழையாகும். எனவே 'மழை வழிபாடு' சங்ககாலம் தொட்டு இன்று வரை முக்கியமான இடத்தைப்பெறுகின்றது. இம்மழைவழிபாட்டின் தொடர்ச்சியாக அமையப்பெற்றதே இந்திரவிழாவாகும். இன்றளவும் மக்கள் இந்திரவிழாவை கொண்டாடி வருகின்றனர். அதற்குக் காரணம் அக்கால மக்களிடம் இருந்து வழிவழியாக நாம் பெற்றுவரும் பண்பாட்டு வாழ்க்கை மரபேயாகும்.

**மழைக் குறிகள்**

பள்ளர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு முறையைப் பெற்றவர்கள். பட்டறிவின் மூலம் பல்வேறு குறிகளையும் உணர்ந்து அவற்றிற்கு ஏற்றவகையில் வாழும் திறம் வாய்ந்தவர்கள்.

பருவகாலத்தில் மழைபொழியும் காலத்தையும் நேரத்தையும் தங்கள் பட்டறிவால் மிகத் துல்லியமாகக் கணக்கிட்டு அறிந்திருந்தனர். மேல்திசையிலும் தென்திசையிலும் மின்னல் மின்னுவது, கழல் காற்றடிப்பது, தவளைக் கத்துவது, நண்டு வளை தோண்டுவது. வானம்பாடி என்னும் பறவை பாடுவது முதலியன மழைக் குறிகளாக முக்கூடற் பள்ளு நூலில் சுட்டப்படுகின்றன. இக்குறிகளின் மூலம் மழைபொழியும் என அறிந்து அதற்கேற்ற உழவியல் முன்னேற்பாடுகளையும் பள்ளர்கள் செய்து கொள்வர்.

**ஆற்று வெள்ளம் நாளை வரத்**

**தோற்று தேகுறி - மலை**

**யாள மின்னல் ஈழமின்னல்**

**சூழ மின்னுதே**

**நேற்று மின்றும் கொம்பு சுற்றிக்**

**காற்ற டிக்குதே - கேணி (முக்கூடற்பள்ளு .35)**

என வரும் முக்கூடற்பள்ளுவின் 35 வது பாடல் மழைக்குறிகளை உணர்த்துகின்றது.

**நேரமும் சகுனமும்**

பள்ளர்களின் வாழ்க்கையில் நல்லநேரம் பார்த்தல், சகுனம் பார்த்தல் முதலிய வழக்கங்கள் இருந்தன. உலகெல்லாம் உணவளிக்கும் உழவுத் தொழிலுக்கு ஊறுவரக்கூடாது என்று எண்ணி நல்ல நேரம் பார்த்து உழவியற் பணிகள் தொடங்கப்பட்டன. நல்ல சகுனம் பார்க்கப்பட்டது.

உழவுப்பணி பருவமழையை நம்பி நடந்தது. பருவ மழை பொழிந்ததும் உழவுப்பணிகள் தொடங்கின. உழவு தொடங்கு முன்னர் நல்லநேரம் பார்த்துத் தொடங்கினர்.

**சத்தமி புதன்சோதி தைதுலக் கரணம்**

**தவறாத சுபயோகந் தருபஞ் சாங்கம்**

**மெத்தநன் றெனப்பார்த்து மேலான வேதியர்கள்**

**மிக்கதுலா முகிழ்த்தம் விதித்தார் இன்று**

**(முக்கூடற்பள்ளு.113)**

என வரும் 113ஆம் பாடலில் உழவுத்தொடங்கும் முன் நல்லநேரம் பார்க்கப்பட்டதைக் காணலாம். சத்தமி திதி, புதன் வாரம், சோதி நட்சத்திரம், தை துலைக் கரணம், சுபயோகம் எனத் திதி, வாரம், நட்சத்திரம், கரணம், யோகம் என பஞ்சாங்கம் பார்க்கப்பட்டது. பூச நட்சத்திரம். பஞ்சமி திதி, சோமவாரம் ஆகிய மூன்றும் கூடிய நேரம் நல்ல நேரம் என்ற குறிப்பு முக்கூடற்பள்ளுவில்

குறிப்பிடப்பட்டுள்ளது. நரையான் வலமாகச் செல்லுவது நல்ல சகுனம் என்றும் கருதப்பட்டது. நல்லநேரத்தில், நல்லசகுனம் பார்த்து முதன்முதலாக ஏர் பூட்டப்படுவதற்குப் பொன்னேர் பூட்டுதல் என்று சிறப்புப் பெயர் வழங்கிற்று.

**இந்நேரம் பூசமென்றார் பஞ்சமி யென்றார்**

**ஏற்றசோம வாரமென்றார் சோபன மென்றார்**

**நன்னேர மாகுமிந்த முகிழ்த்தந் தன்னில்**

**நரையானும் வலமாக விரையச் சென்று**

**(திருவாரூர்ப் பள்ளு.53)**

என வரும் திருவாரூர்ப் பள்ளுவில் 53ஆம் பாடலில் நல்ல நேரமும் நல்லசகுனமும் பார்க்கப்பட்டதைக் காணலாம்.

### மருந்து வைத்தல்

பள்ளன் இளையவள் மீது தீராத மோகங்கொண்டு இருத்தலால், இளையவள் பள்ளனுக்கு மருந்து வைத்ததாக முத்தவள் நம்புகின்றாள். காகத்தின் கண், கூகையின் உள்நாக்கு, கழுகின் கொழுப்பு, நரியின் மூக்கு, பாம்பின் பல், பாகற் கொழுந்து, எலியின் வால், பச்சைப் புனுகு, பூகத்தின் நார், கற்றாழை வேர் முதலியவற்றைக் கூட்டி இவ்வசிய மருந்து தயார் செய்யப்பட்டதாக மூத்தபள்ளி கூறுகின்றாள். இம்மருந்தைச் சேவல் கறியோடு சேர்த்து இளையவள் பள்ளனுக்குத் தந்தாள் என்பதும் மூத்தவள் குற்றச்சாட்டு.

**செஞ்சொட் டியடி யொட்டிப்பின் னின்று**

**சிணுங்கி யானை வணங்கி பிணங்கி**

**மஞ்சொட் டியாடை யொட்டிபே யெட்டி**

**நிரம்ப வேமருந் திட்டன ளாண்டே**

எனவரும் முக்கூடற்பள்ளுவின் 45வது பாடலில் மருந்து தயாரிக்கும் முறை கூறப்பட்டுள்ளது. இம்மருந்தின் செயல்கள், பின்விளைவுகள் யாவை என்பதையும் மூத்தவள் கூறுகின்றாள். ஊட்டிய மருந்து பள்ளனை வாட்டியது. இரவினில் அவன் உறக்கத்தைத் துறந்தான். மூத்தவள் மீது ஏதாவது குற்றம் சாட்டினான். ஏர் பூட்டுவதையும் விடுத்தான்; பண்ணை மாடு என்றும், வயல் என்றும் பாராமல் இளையவள் வீட்டிலே கிடந்தான். இங்ஙனம் மருந்து உண்ட பள்ளனின் செயல்களை மூத்தவள் விளக்குகின்றாள். மருந்து வைத்தல் என்பது பிற பள்ளு நூல்களில் காணப்பெறாதது இங்கு குறிப்பிடத்தக்கது.

### தாலாட்டு

குருகூர்ப் பள்ளு நூலில் தாலாட்டு என்னும் பகுதி இடம் பெற்றுள்ளது. பல்வேறு இலக்கியக் கூறுகளும் பள்ளு நூல்களில் இடம்பெற வேண்டும் என ஆசிரியர், தாலாட்டு பகுதியையும் சேர்த்துள்ளார் போலும்..

**அண்டர்தொழ தென்குருகூ ராழ்வார்க்கு வாய்த்தவயல்**

**எண்டிசையும் பண்ணைபயி ரேற்றப் பிறந்தானோ**

**(குருகூர்ப் பள்ளு.75)**

எனவரும்75வது கண்ணி ஆழ்வாரின் பண்ணை வயலில் பயிரேற்றப் பிறந்த பள்ளனைப் புகழ்ந்துரைப்பதாக அமைந்துள்ளது.

**அன்னதருத் தென்குருகூர் ஆழ்வார் வயல்முழுதும்**

**செந்நெல்நட வந்தபெருஞ் செல்வ மகளாரோ**

**(குருகூர்ப் பள்ளு.76)**

எனவரும் 76வது தாலாட்டு, பண்ணை வயலில் நடுகையில் ஈடுபட்ட பள்ளியைப் போற்றுவதாக உள்ளது

**கும்மியடித்தல்**

முக்கூடற்பள்ளு நூலில் இடம் பெறாத புதுவகை இலக்கியப் பகுதியாகிய கும்மியடித்தல் என்பதைத் திருமலை முருகன் பள்ளில் காணலாம். குயில் கூவியபின் தெய்வத்தைப் வணங்கும் வழிபாட்டுமுறைகளில் ஒன்றாகக் கும்மியடித்தல் பகுதி இடம் பெறுகின்றது.

திருமலை வேலன், குறும்பலா ஈசர், தேவி குழல் மொழி அம்மை, சித்திரசபை சங்கரலிங்கேசர். காளகண்டேசுவரத்து மணிகண்டன், நகரீசர், மகாமாயி எனப் பெருந்தெய்வங்களும் சிறு தெய்வங்களுக்கும் கும்மிப்பாட்டில் வழிபாடு செய்தனர்.

**வாகாக் கொண்டை முடியுங்கடி - முலை**

**மாராப்பைக் கட்டி யிறுக்குங்கடி**

**ஆகா வழிம்புத் திருமலைப் பள்ளன்**

**அண்டாமற் கற்கொண் டெறியுங்கடி**

**(திருமலை முருகன் பள்ளு.33)**

எனவரும் திருமலை முருகன் பள்ளின் 33 வது பகுதி பள்ளியரின் தற்காப்புச் சிந்தனைப் பாடலாக அமைந்துள்ளது.

**திருமணச்சடங்கு முறைகள்**

பள்ளு இலக்கியங்கள் கூறும் திருமணமுறையில் பள்ளனார் மூத்த பள்ளியை உறவின் மூலம் மணப்பதையும், இளையபள்ளியை விருப்பப்பட்டு மணந்த செய்தியும் இடம்பெறுகின்றது.

**உறவுமுறைத் திருமணம்**

**அன்றிது நாள்வரைக்கும் நன்றெனவும்**

**சம்பந்தம் ஆடியே நல்லுறவு கூடியிருப்பார்'**

**(செங்கோட்டு பள்ளு. 1)**

மூத்தபள்ளியை உறவின் மூலம் மணந்த செய்தியை செங்கோட்டு பள்ளு பாடல்1 மூலம் அறியலாம்.

**எங்கள் தாய்வழியும்**

**தந்தை வழியும்**

**இந்தத் திருமலைப்பளளன்**

**வந்தென்னை சாடு செய்தே**

**(திருமலை முருகன் பள்ளு)**

திருமலை முருகன் பள்ளும் மூத்தபள்ளியை உறவின் மூலம் மணந்ததையும் மேலும் திருவேட்டைஅய்யனார் பள்ளுவில் மாமி மகளை மணந்த செய்தியும் இடம்பெறுகின்றது. உறவமுறைத் திருமணம் இலக்கியங்களில் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

**இளம்வயது திருமணம்**

**பள்ளா ஏழுவயதினிலே**

**உமக்கே மனைவாட்டியாக வந்தென். (வையாபுரிப்பள்ளு.4)**

**அன்றென்னையும் முரிமைப்பெண்**

**என்றஞ்சுவ யதினிலே**

**அருப்பம் வராதமுன்பு**

**மறித்துக் கொண்டான் (செங்கோட்டு பள்ளு. 3)**

மூத்த பள்ளி ஏழுவயதில் பன்னனுக்கு மனைவியாக வந்த செய்தியை செங்கோட்டுப் பள்ளுபாடல் மூன்றும், ஐந்து வயதில் மனைவியாக்கிக் கொண்டான் என்ற செய்தியை வையாபுரிப்பள்ளு பாடல் 4 குறிப்பிடுகின்றது.

**பூண்டசெழுந்தேமல்முலை தீண்டனது**

**ஆசை கொண்டு பூக்குமுன்னே**

**தாலிகட்டிச் சேர்க்கை பிரியான்**

**(திருவேட்டைநல்லூர் அய்யனார் பள்ளு.6)**

ஒரு பெண் பூப்படையும் முன்பே திருமணம் செய்து வைக்கும் பழக்கம் இருந்துள்ளமையை திருவேட்டைநல்லூர் அய்யனார் பள்ளுபாடல் 6 எடுத்துரைக்கின்றது.

**பூப்புச்சடங்குமுறை**

பெண் பூப்பெய்திய பதினோறாம்நாள் அல்லது பதினாகாம்நாள் நடத்தப்படும் சடங்கினைப் பூப்புச்சடங்கு எனகின்றனர். இப்பூப்பெய்திய செய்தியை வையாபுரிப்பள்ளு கூறுகிறது.

**தோராயமென்னக் - கொழுந்தியாள்**

**மாராயஞ் சொள்ள- வண்ணான்**

**சுவந்திர மென்றே -அஞ்சுபொள்**

**சேவலைச் செங்கள்னைப் பாராட்டிக் கொடுத்தான்**

**(வையாபரிப்பள்ளு.8)**

பெண்பிள்ளை பூப்பெய்திய செய்தியைக் கூறிய வண்ணானுக்கு ஐந்து பொன்னும், சேவல் செங்கன்றையும் பரிசாகக் கொடுத்த செய்தியை வையாபரிப்பள்ளு பாடல் 8 குறிப்பிடுகின்றது.

**காதுகுத்தல்**

உழவுத்தொழில் செய்து வாழும் மக்கள் தங்களின் குழந்தைகளுக்கு பிறப்பு முதல் இறப்பு வரை பல சடங்குமுறைகளைச் செய்கின்றனர். இவ்வாறு செய்யும் சடங்கு முறைகளில் குழந்தை பிறந்தவுடன் சில நாட்கள் கழித்து காதுகுத்தல் சடங்கு நடைபெறுகின்றது.

**கொன்னுவேற் கண்ணி வள்ளி யம்மையை**

**முனம் வளர்த்த குறவர் எங்கள்**

**பாலர் காது குத்தி வளர்ப்பர்**

**(திருமலை முருகன் பள்ளு.8)**

குழந்தைக்கு காது குத்தி வளர்க்கும் செய்தி திருமலை முருகன் பள்ளு பாடல் 8 குறிப்பிடுகிறது. காதுகுத்தும் நிகழ்வினை அனைத்து சமூக மக்களும் இன்றளவும் கடைபிடித்து வருகின்றனர்.

### முளைப்பாரி சடங்கு முறை

கிராமங்களில் மழைவேண்டி நடத்தப்படும் அம்மன் வழிபாட்டில் முளைப்பாரி, கும்மி, குலவையிடுதல் போன்றவை இன்றும் கிராமங்களில் நடைபெற்று வரும் வழிபாட்டு சடங்குகளாகும். முளைப்பாரி சடங்கு முறையினை கண்ணுடையம்மன் பள்ளு நூலில் காணமுடிகிறது. "களியாட்டம்" என்னும் இச்சடங்குமுறையானது கண்ணுடையம்மன் நூலில் அம்மன் வழிபாட்டு சடங்காக கருதி வழிபடுகின்றனர் இந்த வகையான அம்மன் வழிபாட்டு சடங்கிற்கென்று ஒரு புதிய வீட்டை உருவாக்கி அவ்வீட்டினுள் கண்ணுடையம்மையின் உருவத்தைச் சுவற்றில் வரைந்து அந்த உருவத்தின் முன் சிறு கலயங்களில் தானிய வகைகளைப் போட்டு நீர் ஊற்றி முளைப்பாரி வளர்த்து நாள்தோறும் அம்முளைப்பாரியின் முன்பு கும்மியடித்து வந்துள்ளனர் என்பதை கண்ணுடையம்மன் பள்ளு குறிப்பிடுகின்றது. மேலும் இச்சடங்கு முறையினை மற்றப் பள்ளு நூல்கள் களியாட்டம் என்று குறிப்பிடுகின்றது. சிறிய ஆட்டுக்குட்டியைப் பலிகொடுத்து கள்ளை உண்டு காளிதெய்வத்தின் களியாட்டம் ஆடும் செய்தியை திருமலைமுருகன் பள்ளுவின் மூலம் அறியலாம்.

மும்மாரி மழைபொழியவேண்டும். நோய்கள் பிணிகள் அணுகாமல் நாட்டிலுள்ளோர் செல்வச்செழிப்போடு வாழ வேண்டும் என்று கும்மியடிக்கின்றனர்.

தெம்முனை வேலவனைக் கொண்டாடிச் சேர்ந்து கும்மியடிங்கடி - (திருமலை முருகன் பள்ளு.)

என்று முருகனைக் கொண்டாடி கும்மியடிக்கும் செய்தியை திருமலைமுருகன் பள்ளுவின் மூலம் அறியமுடிகிறது.

### பழமொழிகள்

மக்களிடம் புழக்கத்தில் இருக்கும் பழமொழிகள் கொண்டு அவ்வட்டார பழக்க வழக்கங்களை அறிந்துகொள்ளலாம். பள்ளு இலக்கியம் பொதுமக்கள் இலக்கியமாக திகழ்வதால், அவர்தம் பட்டறிவில் கிளைத்தெழுந்த பழமொழிகள் பலவும் பள்ளு நூலின் இடையிடையே மின்னுகின்றன. இம்முறையில் திருமலைமுருகன் பள்ளுவில் ஏறத்தாழ எழுபத்தைந்து பழமொழிகள் எடுத்தாளப்பட்டுள்ளன.

**ஈமிதித்து முடமாகுமோ**

**(திருமலைமுருகன்பள்ளு.113)**

**காலஞ் செய்வது கோலஞ் செய்யாது**

**(திருமலைமுருகன்பள்ளு. 122)**

**சுமக்கிற எருதுக்குத் துள்ளுவதும் கடன்**

**(திருமலைமுருகன்பள்ளு.125)**

பள்ளு நூல்களில் பொதுமக்களிடையே வழங்கும் வழக்குச் சொற்களும் பழமொழிகளும் இடம் பெற்று பள்ளு இலக்கியங்கள் பழமொழிக் களஞ்சியங்களாய்த் திகழ்வதை அறியலாம்.

முக்கூடற்பள்ளில் ஏறத்தாழ நாற்பது பழமொழிகளும் திருமலை முருகன் பள்ளில் ஏறத்தாழ எழுபத்தைந்து பழமொழிகளும் இடம்பெற்று உள்ளன. இளையபள்ளி மூத்தபள்ளி ஏசல், புலம்பல், முறையீடு ஆகிய பகுதிகளில் பழமொழிகள் இடம்பெறுகின்றன.

உலகியல், வாழ்வியல், வேளாண்மை, தத்துவம் முதலிய பலதுறை பயின்றனவாக இப்பழமொழிகள் அமைந்து, பள்ளு இலக்கியங்களுக்கு சிறப்பளிக்கின்றன.

**கலைச்சொற்கள்**

தொளியடித்தல், சேறு கலக்குதல், பரம்படித்தல், வேலிபரித்தல், நாற்றுக் கிளைத்தல், நாற்று சமைத்தல், உழவு சடித்தல், உழவு மறித்தடித்தல் அல்லது இரட்டித்தல் என்றும் மூன்றாம் உழவு மூச்சாலடித்தல் அல்லது முச்சலித்தல் என்றும் கலைச்சொற்கள் பள்ளு இலக்கியங்களில் காணப்படுகின்றன.

மேலும், பொன்னேர் பூட்டுதல், தொளிகலக்குதல், கங்களவு நீர்பாய்ச்சுதல், வெட்டி விட்டுச் சரித்தல், கிடைவைத்தல், குழைபதித்தல், பந்திப்படுத்தல், நிரைவகுத்தல், வேரூன்றல், பசப்பேறல், குருத்து செறிதல், பயிர் குலவுதல், கருக்கொள்ளுதல், அரைதிரளல், பொதி நீட்டுதல், பால்கோதுதல் என உழவர்கள் கலைசொற்களைக் கையாண்டுள்ளனர்.

கதிர் தலைசாய்த்தலைத் தலைவளைதல் என்றும், கதிர்முதிரும் நிலையைக் கதிர் முதிர்தல் என்றும், பயிரில் செவ்வண்மை படர்ந்து முற்றுதலை இடைபழுத்தல் என்றும், நெல்லின் தோகை சிவக்கத் தொடங்குவதைப் பயிர்சிவத்தல் என்றும், நெல்மணிகள் நன்றாக முற்றி விளைந்த நிலையை முறுகவிளைதல் என்றும் குறிப்பிட்டனர்.

இங்ஙனம் கலைச்சொற்களைத் தன்னகத்தேக் கொண்டு பள்ளு இலக்கியங்கள் வட்டார மணத்தோடு விளங்குகின்றன.

**முடிவுரை**

உழவுத் தொழிலுக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட பள்ளர்கள்,சடங்கு முறைகளைப் பின்பற்றி தங்கள் மரபினைக் கடைப்பிடித்து வந்துள்ளனர் என்பதை இக்கட்டுரையின்வழி அறிந்து கொள்ள முடிகிறது.

பள்ளு இலக்கியங்கள் மருதநிலத்தில் வாழும் உழவர் பெருமக்களாகிய பள்ளர்களின் வாழ்வியலைப் படம்பிடித்துக்காட்டி பொதுமக்கள் இலக்கியங்களாய்த் திகழ்வன. எளிமைத்தன்மையும் உயிர்ப்பும் கொண்ட வாழ்வியல் இலக்கியங்களாய் திகழ்ந்து தமிழகத்தின் காலப்பெட்டகங்களாய் விளங்குவன பள்ளு இலக்கியங்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**துணைநூற்பட்டியல்**


கந்தசாமி, ந. (பதி.). (1967). செங்கோட்டுப்பள்ளு. பழகுதமிழ் பதிப்பகம்.

செயராமன், ந. வீ. (2000). பள்ளு இலக்கியம். மணிவாசகர் பதிப்பகம்.

ஞானசேகரன், தே. (2006). பள்ளு இலக்கியம்: மறுவாசிப்பு பிரதிக்கு வெளியே. (பதிப்பு விவரம் இல்லை).

சுப்ரமணியம், ச. வே. சிற்றிலக்கிய திறனாய்வு. உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்.

நாகராசன், ப. வே. (1992). திருவேட்டை நல்லூர் அய்யனார் பள்ளு. சரசுவதி மஹால் நூலகம்.

பழனிச்சாமி (பதி.). வையாபுரிப் பள்ளு. ஸ்ரீதண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம்.

வரதராசன், மு. (1988). இலக்கிய மரபு. பாரி நிலையம்.

முக்கூடற்பள்ளு. சாரதா பதிப்பகம்.